**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் அவசர கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 16.10.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப்பொருள்**

மேட்டூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டங்களில் முடிவுற்ற பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதுப்பிக்க தமிழ்நாடு நிலையான நகர்புற அபிவிருத்தி திட்டம் (Tamil Nadu Sustainable Project)ன் கீழ் ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகளை மேற்கொள்ள தீர்மான எண்.105 நாள்05.06.2020ல் அனுமதி பெறப்பட்டது நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்திட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.1756/2020/இ1 நாள் –ல் அனுப்பி வைக்கப்பட்டள்ளது

தற்போது நிதி மேலாளர்,தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு நிதி (TNUDF),சென்னை அவர்களின் கடிதம். TNUDF/Projects/TNSUDP/Mettur Roads நாள்.07.10.2020ஆம் தேதிய கடிதத்தில் சாலை சீரமைப்பு பணிகளை உலக வங்கி உதவியுடன் TNUDF திட்டத்தின் கீழ் கீழ்கண்டுள்ள நிதி அமைப்பு (Funding Patterrn)செய்திட நகர்மன்ற தீர்மானம் பெற்று வைத்திட தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| Sl.No | Means of Finance | Amount (Rs.in Crores) |
|---|---|---|
| 1 | Loan from Tamilnadu Urban Development Fund (TNUDF)under World Bank assisted TNSUDP | 2.47 |
| 2 | Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP | 5.68 |
| 3 | ULB Contribution | 1.85 |
| | Total | 10.00 |

மேற்படி நிதி அமைப்பில் (Funding Patterrn) உலக வங்கி உதவியுடன் TNSUDP திட்டத்தில் மேற்படி சாலை பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நிதி மேலாளர்,தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு நிதி,சென்னை அவர்களின் கடிதம். TNUDF/Projects/TNSUDP/Mettur Roads நாள்.07.10.2020ஆம் தேதி கடிதத்தில் தெரிவித்துள்ளபடி

| Sl.No | Means of Finance | Amount (Rs.in Crores) |
|---|---|---|
| 1 | Loan from Tamilnadu Urban Development Fund (TNUDF)under World Bank assisted TNSUDP | 2.47 |
| 2 | Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP | 5.68 |
| 3 | ULB Contribution | 1.85 |
| | Total | 10.00 |

மேற்படி நிதி அமைப்பில்(Funding Pattern) சாலை பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1756/2020/இ1)**

**தீர்மான எண். 153 நாள் 16.10.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்**
**மேட்டூர் நகராட்சி**

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**
**<u>மேட்டூர் நகராட்சி</u>**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 23.10.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**<u>மன்றப் பொருள்</u>**

1. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 28 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடங்களும், 4 எண்ணம் பொது கழிப்பிடங்களும் , மொத்தம் 32 கழிப்பிடங்கள் உள்ளன. இவற்றில் 10 எண்ணிக்கை கீழ்கண்ட

| | | | |
|---|---|---|---|
| 01 | தங்கமாபுரிபட்டிணம் மார்க்கெட் | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 02 | மாதையன்குட்டை ராஜாஜி நகர் | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 03 | எலிக்கரடு | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 04 | கூலி லைன் | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 05 | தினசரி மார்க்கெட் | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 06 | குமரன் நகர் | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 07 | காமராஜர் நகர் | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 08 | நேதாஜி நகர் | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 09 | கீழ்குள்ளவீரன்பட்டி | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| 10 | தூக்கனாம்பட்டி | பொது கழிப்பிடம் | 1 எண்ணிக்கை |
| | | மொத்தம் | 10 எண்ணிக்கை |

கழிப்பிடங்களை தினசரி சுத்தம் செய்ய ஒரு வருட காலத்திற்கு இவ்வலுவலக உத்திரவு ந.க.எண். 3216/2018/H1 நாள் 30.12.2019-படி, ( 01.12.2019 முதல் 30.11.2020 முடிய) ஒரு வருட காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, மாதம் 1-க்கு கழிப்பிடம் 1-க்கு ரூ.6000/-வீதம் 10 கழிப்பிடங்களை தினசரி சுத்தம் செய்திட " சுபம் கங்கா சேவா ஜன்ஷதன்" என்ற சமூக தன்னார்வலர் தொண்டு நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்து நல்ல முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்காணும் தொண்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணிக்கான காலக்கெடு வருகின்ற 30.11.2020-ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே இத்தொண்டு நிறுவனம் எதிர்வரும் 01.12.2020 முதல் 30.11.2021 வரை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு தற்பொழுது நிர்வகித்து வரும் தொகைக்கும், உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், பணிகளை திறம்பட செய்து தருகிறேன் எனவும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து தருமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது. மேலும் மீதமுள்ள 22 கழிப்பிடங்களில் கீழ்கண்ட 10 கழிப்பிடங்களான

| வ.எண் | வார்டு எண் | கழிப்பிடம் அமைந்துள்ள இடம் | CT/PT | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | 5 | பாரதி நகர் | CT | 1 No. |
| 02 | 10 | ராஜாஜி நகர் | CT | 1 No. |
| 03 | 10 | மீனவர் தெரு | CT | 1 No. |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | 13 | சக்தி நகர் | CT | 1 No. |
| 05 | 15 | தூக்கனாம்பட்டி | CT | 1 No. |
| 06 | 17 | காவேரி நகர் | CT | 1 No. |
| 07 | 21 | நேதாஜி நகர் | CT | 1 No. |
| 08 | 22 | பிட்டர்மேன் குடியிருப்பு | CT | 1 No. |
| 09 | 23 | கூலி லைன் | CT | 1 No. |
| 10 | 27 | போலீஸ் குடியிருப்பு | CT | 1 No. |

சுத்தம் செய்ய 10 கழிப்பிடங்களை கூடுதலாக தனக்கு வழங்குமாறும் அதற்காக சுத்தம் செய்தல் பணிக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் தொகைக்கு பணிகளை மேற்கொள்கிறேன் என கடிதம் வரப் பெறப்பட்டுள்ளது. எனவே தற்பொழுது கவனித்து வரும் 10 கழிப்பிடங்களையும், புதியதாக 10 எண்ணிக்கை கழிப்பிடங்களையும், சேர்த்து மொத்தம் 20 கழிப்பிடங்களை சுத்தம் செய்ய 01.12.2020 முதல் 31.11.2021 வரை ஒரு வருட காலத்திற்கு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மாதம் ஒன்றுக்கு, கழிப்பிடம் ஒன்றுக்கு ரூ. 6000/-வீதம், 20 கழிப்பிடங்களுக்கு (20x6000 = 14,40,000) ரூ. 14,40,000/-ஆகும் எனவும், இத்தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடங்கள் 10 எண்ணிக்கையினை சுத்தம் செய்தல் பணிகளை மேற்க்கொண்டு வரும் " சுபம் கங்கா சேவா ஜன்ஷதன்'' என்ற தொண்டு நிறுவனம் மூலம் கழிப்பறை 1-க்கு மாதம் 1-க்கு ரூ.6000/-க்கு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நிறுவனத்திற்கு 01.12.2019 முதல் 30.11.2020 முடிய ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவுக்கான காலக்கெடு வருகின்ற 30.11.2020-ந் தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்காணும் நிறுவனம் சென்ற வருடம் வழங்கப்பட்ட அதே தொகைக்கும், அதே நிபந்தனைகளுக்குட்பட்டும், மேலும் ஒரு வருட காலத்திற்கு பணிக்கான கால நீட்டிப்பு செய்தும், மேலும் புதியதாக 10 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடங்களை கூடுதலாக அதே தொகைக்கும், அதே நிபந்தனைகளுக்குட்பட்டும், பணிகள் மேற்கொள்வது குறித்து வரப்பெற்ற கடிதத்தின்படியும் மொத்தம் 20 கழிப்பிடங்களை தன்னார்வ தொண்டு நிறுவனமான " சுபம் கங்கா சேவா ஜன்ஷதன்'' என்ற தொண்டு நிறுவனம் மூலம் ஒரு வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவின தொகையான ரூ. 14,40,000/-க்குள் செலவினம் மேற்கொள்ளவும், மேற்காணும் தன்னார்வர் தொண்டு நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்.3415/2020/H1)**

**தீர்மான எண். 154 நாள் 23.10.2020**

**அனுமதிக்கப்பட்டது**

2. மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் வருடாந்திர பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 15.02.2019ல் ஒப்பந்ததாரர் திரு.ம.கோவிந்தன் அவர்களுக்கு பணி உத்தரவு வழுங்கப்பட்டு 2018ம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் முதல் வருடம் முடிவடைந்து ஒரு ஆண்டிற்கு பராமரிப்பு தொகை ரூ.17.06 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.626 நாள்.22.09.2016ல் அனுமதி பெறப்பட்டு இரண்டாம் ஆண்டிற்கான பராமரிப்பு தொகை ரூ.17.06 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.46 நாள்.28.02.2017 மற்றும் 2019ம் ஆண்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.8 நாள்.11.01.2019ல் பெறப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட பராமரிப்பு பணி பிப்ரவரி மாதத்துடன் முடிவடைந்ததால், மேலும் மூன்று மாதங்களுக்கு பணியினை நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.48 நாள்.28.02.2020ல் பெறப்பட்டு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நகர்மன்ற தீர்மான102 நாள்.26.05.2020ல் பெறப்பட்டு மூன்று மாதங்களுக்கு (ஜீன், ஜீலை மற்றும் ஆகஸ்ட்) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகர்மன்ற தீர்மானம் 138 நாள்.28.08.2020ல் பெறப்பட்டு மூன்று மாதங்களுக்கு (செப்டம்பர் மற்றும் அக்டோபர்)பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 2020–2019ம் ஆண்டு செந்தூர விலை விகித பட்டியலின் படி மேற்கொள்ள திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையராக அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதால், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கும் வரை பழைய விலைவிகித அடிப்படையில் அதே ஒப்பந்ததாரர் மூலம் (திரு.கே.கோவிந்தன்) மேலும் இரண்டு மாதங்களுக்கு (நவம்பர் மற்றும் டிசம்பர்) பணியை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.4495/2016/இ1)**

**தீர்மான எண். 155 நாள் 23.10.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** இந்நகராட்சியில் புதிய அலுவலக வளாகம் வர்ணம் பூசுதல் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 23.10.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s Kiruthika Construction<br>Opp Madilline<br>Salem Camp, Mettur | 0.20%<br>மதிப்பிட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s R.R.Kaniska & Co<br>Cooli Line Mettur | 1.30%<br>மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s Kiruthika Construction ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.2518/2020/இ1)**

**தீர்மான எண். 156 நாள் 23.10.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனிஅலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**